**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 2-4-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**மாநில அளவில் நடைபெற்ற விளையாட்டு போட்டியில்
தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைகழகம் வெற்றி**

அண்ணாமலைப் பல்கலைகழகம் சிதம்பரத்தில் கடந்த 27.03.2019 முதல் 29.03.2019 வரை வேளாண்மைக் கல்லூரிகளுக்கிடையே பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கூடைப்பந்து மற்றும் கைப்பந்து மாணவர் மாணவியர் அணியினர் பங்கேற்றனர். கூடைப்பந்து மாணவியர் அணி இறுதிப்போட்டியில் அண்ணாமலைப் பல்கலைகழக அணியை 11- க்கு 1 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்றது. கூடைப்பந்து போட்டியில் மாணவர் அணி இரண்டாம் இடம் பெற்றது. மாணவியர் கைப்பந்து அணி இரண்டாம் இடத்தில் வெற்றி பெற்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவி செல்வி நந்தினி அவர்கள் சிறந்த கூடைப்பந்து வீரராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அணி வீரர்களை உடற்கல்வி இயக்குனர் ராகவன் அவர்கள் வழிநடத்தி சென்றார்.

வெற்றி பெற்ற வீரர் - வீராங்கனைகளை பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர் மற்றும் கல்லூரி முதன்மையர்கள் பாராட்டினர்.

மக்கள் தொடர்பு அலுவலர்